සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| ශ්‍රේණිය / தரம் / Grade | 11 | විෂයය / பாடம் / Subject | சைவநெறி | පත්‍රය / வினாத்தாள் / Paper | I | පැය / மணித்தியாலம் / Hours | 1 |
|---|---|---|---|---|---|---|---|

**கவனிக்கவும் :**
எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாக்களுக்குமுரிய சரியான விடையின் இலக்கத்தினுள் (×) புள்ளடி இடுக.

**பகுதி – I**

1. சைவசமய மரபிலே முதலில் வழிபடப்படுபவர்
(1) இலிங்கோற்பவர் (2) விநாயகர் (3) விஷ்ணு (4) முருகன்

2. "பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி" என இறைவனைப் பாடியவர்
(1) சம்பந்தர் (2) அப்பர்
(3) சுந்தரர் (4) மாணிக்கவாசகர்

3. சைவசமயிகள் மேற்கொள்ள வேண்டிய வாழ்க்கை முறை.
(1) ஆடம்பர வாழ்க்கை (2) துறவு வாழ்க்கை
(3) பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் வாழ்க்கை (4) தன்னலவாழ்க்கை

4. சம்ஸ்காரம் என வடமொழியில் கூறப்படுவது
(1) சடங்குகள் (2) விரதங்கள் (3) பண்டிகைகள் (4) விழாக்கள்

5. வளர்பிறைக் காலம் என அழைக்கப்படுவது
(1) பூர்வ பக்கம் (2) அபரபக்கம்
(3) உத்தராயணம் (4) தெட்சணாயணம்

6. "யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி" என்று பாடியவர்
(1) திருநாவுக்கரசர் (2) திருமூலர் (3) திருவள்ளுவர் (4) சேந்தனார்

7. பிரகஸ்பதி வாரம் எனப்படுவது
(1) திங்கட்கிழமை (2) செவ்வாய்க்கிழமை (3) வியாழக்கிழமை (4) சனிக்கிழமை

8. இறந்தவர்களின் எலும்பையும் சாம்பலையும் புண்ணிய தீர்த்தத்தில் கரைப்பது
(1) தகனக்கிரியை (2) அஸ்திசஞ்சயனம் (3) அந்தியேட்டி (4) சபிண்டீகரணம்

9. சந்திரகிரகணம் எனப்படுவது
(1) சந்திரனை ராகு பற்றுதல் (2) சூரியனை கேது பற்றுதல்
(3) சூரியனை ராகு பற்றுதல் (4) சந்திரனை கேது பற்றுதல்

10. ஊருடன் ஒத்து வாழ்தல்
(1) ஈகை (2) நட்பு (3) ஒப்புரவு (4) ஐயுறவு

11. பஞ்சாங்க விடயங்களைத் தெளிவாகவும் விளக்கமாகவும் எழுதி சோதிடக் கலைக்குப் பெருமை சேர்ந்தவர்
(1) ஆரிய பட்டர் (2) வராகமிஹிரர் (3) வியாசர் (4) வரதபண்டிதர்



kalvi.lk

12. புற இருள் களைந்து ஒளிபரப்பும் தினம்
(1) கந்தசஷ்டி (2) தைப்பொங்கல்
(3) வரலட்சுமி விரதம் (4) கார்த்திகை விளக்கீடு

13. திருவெம்பாவையின் இறுதி நாளன்று அனுட்டிக்கும் விரதம்
(1) திருப்பாவை (2) சிவராத்திரி
(3) பிரதோஷம் (4) திருவாதிரை

14. நடராஜ வடிவத்தில் காக்குந் தொழிலைக் குறிப்பது
(1) அபயகரம் (2) துடி ஏற்றிய கரம்
(3) தூக்கிய திருவடி (4) தீச்சுடர் ஏற்றிய கரம்

15. பிறருக்காக ஒருவன் சாவது மேலுகைத் தரும் எனக் கூறியவர்
(1) கம்பர் (2) இளங்கோ (3) சிபி (4) குமணன்

16. சுமங்கலிப் பெண்களால் அனுட்டிக்கப்படும் விரதம்
(1) திருவாதிரை (2) பிரதோஷம் (3) கேதாரகௌரி (4) வரலட்சுமி

17. சைவ சமயத்தின் சிறப்பு நூல்
(1) வேதங்கள் (2) ஆகமங்கள் (3) திருமுறைகள் (4) புராணங்கள்

18. மனித விழுமியங்களுள் ஒன்று அல்லாதது
(1) பிறருக்கு உதவுதல் (2) பிறரிடம் அன்பு செலுத்துதல்
(3) செய்ந்நன்றி மறத்தல் (4) விருந்தோம்பல்

19. பாவக்கிரகம் என அழைக்கப்படுபவர்
(1) புதன் (2) வெள்ளி (3) சனி (4) வியாழன்

20. திருமண கிரியைகளில் உடலாலும் உள்ளத்தாலும் இருவரும் ஒருவரே என்பதை உணர்த்தும் சடங்கு
(1) பாணிக்கிரகணம் (2) ஏழடி வைத்து நடத்தல்
(3) மாலை மாற்றுதல் (4) கணையாளி (மோதிரம்) எடுத்தல்

21. வடபாரதத்தில் "யட்சராத்திரி" என அழைக்கப்படும் பண்டிகை
(1) ஆடிப்பிறப்பு (2) தீபாவளி (3) போகிப்பண்டிகை (4) விளக்கீடு

22. மகோற்சவத்தில் தீர்த்தத்திருவிழா குறிப்பது
(1) படைத்தல் (2) காத்தல் (3) அழித்தல் (4) அருளல்

23. மருத்துநீர் வைத்து நீராடிப் புத்தாடை அணிந்து கொண்டாடும் பண்டிகை
(1) தைப்பொங்கல் (2) தீபாவளி
(3) சித்திரை வருடப்பிறப்பு (4) ஆடிப்பிறப்பு

24. விநாயகசஷ்டி விரதம் அனுட்டிக்கப்படும் தினங்கள்
(1) பன்னிரண்டு (2) ஏழு (3) இருபத்தொன்று (4) ஒன்பது

25. தருமசேனர் என அழைக்கப்பட்ட நாயனார்
(1) அப்பர் (2) சுந்தரர் (3) மாணிக்கவாசகர் (4) சம்பந்தர்

26. இறைவனின் அருட்பண்பை விதந்து காட்டும் நோக்கமாக இயற்றப்பட்ட சித்தாந்த நூல்
(1) திருக்குறள் (2) திருவருட்பயன் (3) மணிமேகலை (4) பெரியபுராணம்

27. காயத்திரி மந்திரம் இடம்பெறும் வேதம்
(1) இருக்கு (2) யசுர் (3) சாமம் (4) அதர்வம்

28. உலகியல் வாழ்க்கைக்குப் பெரிதும் உதவவல்ல வேதம்
(1) இருக்கு (2) யசுர் (3) சாமம் (4) அதர்வம்

29. "சந்தக் கவி" எனப் போற்றப்படும் நூல்
(1) திருவாசகம் (2) திருமந்திரம்
(3) திருப்புகழ் (4) திருப்பல்லாண்டு



kalvi.lk

30. பிற்காலத் தோத்திரப் பாடல்களில் அடங்காதது
(1) திருப்புகழ் (2) பராபரக்கண்ணி (3) சகலகலாவல்லிமாலை (4) பெரியபுராணம்

31. முருகப் பெருமானின் பெருமையைப் புகழ்ந்து கச்சியப்பர் பாடிய நூல்.
(1) திருப்புகழ் (2) திருக்குறள் (3) பராபரக்கண்ணி (4) கந்தபுராணம்

32. உற்றுமை சேர்வது மெய்யினையே என்ற பாடலில் இடம்பெறும் தலம்
(1) சிதம்பரம் (2) திருக்கழுமலம் (3) திருவாரூர் (4) திருவொற்றியூர்

33. இருளிலும் கொடிய மலம்
(1) ஆணவம் (2) கன்மம் (3) மாயை (4) வினைகள்

34. சைவவித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
(1) 1923 (2) 1926 (3) 1928 (4) 1930

35. மூவாயிரம் பாடல்களையும் ஒன்பது தந்திரங்களையும் கொண்ட நூல்
(1) திருவாசகம் (2) திருக்கோவையார் (3) திருமந்திரம் (4) திருக்குறள்

36. சிவனடியார் திருக்கூட்டத்தைக் குறிப்பது
(1) குரு (2) இலிங்கம் (3) சங்கமம் (4) தீட்சை

37. மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை அடங்கும் திருமுறை
(1) எட்டு (2) ஒன்பது (3) பத்து (4) பதினொன்று

**அட்டவணையை அவதானித்து 38 - 40 வினாக்களுக்கு விடை தருக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A | ஆளுடைய பிள்ளையார் | D | நரசிங்க முனையர் | G | சங்கிலியார் |
| B | நம்பியாரூரர் | E | அரிமர்த்தன பாண்டியன் | H | மங்கையற்கரசியார் |
| C | திருவாதவூரர் | F | கூன் பாண்டியன் | I | செம்மனச்செல்வி |

38. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடன் தொடர்புடைய தொகுதி
(1) AEH (2) BFG (3) AFH (4) CEI

39. சுந்தரமூர்த்தி நாயனாருடன் தொடர்புடைய தொகுதி
(1) AFG (2) BDI (3) CDG (4) BDG

40. மாணிக்கவாசகருடன் தொடர்புடைய தொகுதி
(1) CEI (2) CEH (3) BEI (4) ADH

(40 புள்ளிகள்)



kalvi.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| ශ්‍රේණිය / தரம் / Grade | 11 | විෂයය / பாடம் / Subject | சைவநெறி | පත්‍රය / வினாத்தாள் / Paper | II | පැය / மணித்தியாலம் / Hours | 2 |
|---|---|---|---|---|---|---|---|

**முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடைஎழுதுக.**

1. **சுருக்கமான விடைஎழுதுக.**
   (1) வீட்டில் தினசரி இடம்பெறும் சமயச் செயற்பாடுகள் இரண்டு எழுதுக.
   (2) நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தை இயற்றியவர் யார்?
   (3) பஞ்சாங்கத்தில் காணப்படும் ஐந்து உறுப்புக்களும் எவை?
   (4) திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?
   (5) சுந்தரமுர்த்திநாயனாரின் குருபூசைத் தினம் யாது?
   (6) உத்தராயணகாலம் என்றால் என்ன?
   (7) ஆருத்திராதரிசனம் மிகவிசேடமாக நடைபெறும் தலம் எது?
   (8) அருணகிரநாதர் கிளி வடிவம் பெற்றது ஏன்?
   (9) மண்டோதரி வழிபட்ட ஈழத்துத் தலம் யாது?
   (10) விபுலானந்தர் எழுதிய நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

2. பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக. அதன் பொழிப்புரையையும் எழுதுக.
   (அ) அங்கமும் வேதமும் ………………….
   (ஆ) நாமார்க்கும் குடியல்லோம் ………………….
   (இ) பாலுக்குப் பாலகன் …………………..
   (ஈ) விநாயகனே வெவ்வினையை…………
   (உ) உம்பர் தரு தேனுமணிக் ……………………..

(2 × 5 = 10 புள்ளிகள்)

3. ‘‘என் கடன் பணி செய்து கிடப்பதே’’
   (1) நாவுக்கரசருக்கு இறைவன் பொதிச்சோறு அளித்த தலம் எது?
   (2) பல்லவமன்னன் திருநாவுக்கரசுநாயனாருக்கு வழங்கிய தண்டனைகள் யாவை?
   (3) திருநாவுக்கரசுநாயனாரின் சமூகப் பணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

(2 + 4 + 4 = 10 புள்ளிகள்)

4. இந்துப் பண்டிகைகளுள் தீபாவளியும் ஒன்று
   (1) தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படும் காலம் யாது?
   (2) தீபாவளிப் பண்டிகையின் போது தவிர்க்க வேண்டிய விடயங்கள் மூன்று தருக.
   (3) இப்பண்டிகையோடு தொடர்பான கதையினைச் சுருக்கமாக விளக்குக?

(2 + 4 + 4 = 10புள்ளிகள்)

5. ‘வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்’’

(1) வேதத்தின் பிறபெயர்கள் நான்கு எழுதுக

(2) வேதங்களின் நான்கு பகுதிகளும் எவை? அவை அடங்கும் காண்டங்கள் யாவை?

(3) ஆகமங்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் நான்கினைத் தருக.

(2 + 4 + 4 = 10புள்ளிகள்)

6. ‘‘ஒழுக்கவாழ்வின் மூலம் பின்பற்றப்படுகின்ற நடத்தைகள் யாவும் விழுமியமாகும்’’

(1) சைவசமயி ஒருவனுக்கு இருக்க வேண்டிய உயர்ந்த பண்புகள் மூன்று தருக.

(2) இறைசிந்தையுடன் வாழ்வியற் கருமங்களை ஆற்றுவதற்கான இடங்கள் எவை?

(3) பாடசாலைகளில் இடம் பெறும் அன்றாடச் சமயச் செயலொழுங்குகள் நான்கினைக் குறிப்பிடுக.

(3+ 3 + 4 = 10புள்ளிகள்)

7. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(1) பெரியபுராணம்

(2) நயினைநாகபூசணி அம்மன் ஆலயம்

(3) பஞ்சாங்கம்

(4) சமயமும் சூழலும்

(5 + 5 = 10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page